## IN THE COURT OF DISTRICT MUNSIF, T. VADIPATTI, MADURAI DISTRICT

| | | | | |
|---|---|---|---|---|
| | | OS. No. | | 47/2017 |
| | | D/W's | : | DW2 |
| DEPOSITION OF WITNESS | | | : | |
| NAME | மாரிமுத்து | CASTE | : | |
| S/O | சமயக்கருப்பு | RELIGION | : | இந்து |
| VILLAGE | அய்யங்கோட்டை | CALLING | : | |
| TALUK | வாடிப்பட்டி | AGE | : | 56 |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 06.11.2025**

<u>குறுக்கு விசாரணை</u>

1. நான் 6ம் வகுப்பு வரை படித்திருக்கிறேன். மனோகரன் எனக்கு 20 வருடமாக பழக்கம், என்னுடன் படித்தவர். எனக்கு அவர்கள் வீட்டில் உள்ள மற்ற நபர்களை பற்றி நேரடியாக தெரியாது. வழக்கை எதற்காக தாக்கல் செய்துள்ளார்கள் என்று எனக்குத்தெரியும். 2016ம் வருடம் கலெக்டர் அலுவலகத்திற்கு பிரதிவாதியுடன் வழக்குச்சொத்திற்கான பட்டா பெறுவதற்காக சென்றேன். இந்த பட்டாவிற்கான சொத்து எங்கு உள்ளது என்று எனக்குத்தெரியாது.

2. மேற்படி பட்டா அதற்குமுன் யார்பெயரில் இருந்தது என்று எனக்குத்தெரியாது. பட்டா வாங்கிய சமயத்தில் பிரதிவாதி அய்யங்கோட்டையில் அவரது மாமனார் வீட்டில் இருந்தார். 20 வருடங்களுக்கு முன் பிரதிவாதிக்கும் வாதிக்கும் இடையே பாகப்பிரிவினை நடந்தது என்றால் எனக்குத்தெரியாது. வழக்குத்தரப்பினர்களின் குடும்பச்சொத்து எத்தனை உள்ளது என்று எனக்குத்தெரியாது. நான் பிரதிவாதியுடன் பட்டா வாங்கமட்டும் தான் சென்றேன் என்றாலும் மற்ற விவரங்கள் எனக்குத்தெரியாது என்றாலும் சரியல்ல.

3. எனது நிரூபண வாக்குமூலத்தில் உள்ளதை வாதி சொன்னது என்றால் சரியல்ல. எனக்கு வழக்கு சம்பந்தமாக எதுவும் தெரியாது என்றாலும் பிரதிவாதியை தெரியாது என்றாலும் ஆதாயத்திற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

//True copy//
Sd/- M.P.Ramkishore
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
வாடிப்பட்டி.